
பங்குனி – சித்திரை 2019

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -05 எழுத்து -25




தடைகளைத் தகர்த்து

தகவுகளைத்தேடி

## இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM

( Poetry Magazine)

விலை 60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் ௨௫

மார்ச் - ஏப்ரல் 2019

ஆசிரியர்

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

படைப்பாளிகள்

| | |
|---|---|
| செ.ஞானராசா | விவேகானந்தனூர் சதீஸ் |
| திருமலை சுந்தா | சூசை எட்வேட் |
| ஈழநல்லூர் கண்ணதாசன் | புன்னகை வேந்தன் |
| எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா | முத்துமாதவன் |
| சைல்லிதாசன் | கன்னிமுத்து வெல்லபதியான் |
| சேனையூர் அரசரெத்தினம் | சேனையூர் அச்சுதன் |
| முல்லைவீரக்குட்டி | பத்மபிரஷன் |
| திருமலையாள் | கே.எம்.ஏ.அஸீஸ் |
| சிவரமணி | எஸ்.ஆர்.தனபாலசிங்கம் |

மூலமும் பெயர்ப்பும் - சி.சிவசேகரம்
நீங்களும் எழுதலாம் - ஓர் ஆய்வு
செல்வி மிஷாந்தி செல்வராஜா
கிடைக்கப்பெற்றோம்

**பதிவுகள்**

அட்டைப்படம் : ஓவியர் கே.சிறிதரன்
வடிவமைப்பு : மு.யாழவன்

தொடர்புகளுக்கு
நீங்களும் எழுதலாம்
43/4, சணல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
0
0
7

# கவிதை ஓர் ஆயுதமாக

மார்ச் - ஏப்ரல்

இருபத்து நான்கு இதழ்கள் வரை விரிந்த "நீங்களும் எழுதலாம்" கவிதை இதழ் ஓர் இடைவெளிக்குப் பின் மீண்டும் மலர்வது அதன் இயங்குநிலை குறித்த தொடர் கரிசனையின் விளைவே. இதனைப் படைப்பாளிகள், வாசகர்கள் ஆகிய நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள் என உறுதியாக நம்புகிறோம். "நீங்களும் எழுதலாம்" ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு குழுவின் விருப்பத்தை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டதன்று. அது சமூக அக்கறையுடன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கிவருகிறது. நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் மாதாந்தம் ஒழுங்கமைக்கும் நிகழ்வுகளே இதற்கு சான்று.

சமூக அக்கறையுடன் பலவிடயங்கள் தோன்றுவதும், பின் காணாமற் போவதும் சாதரணமாகிவிட்டது. உருவானவற்றை ஆதரவுடன் தட்டிக் கொடுத்து இயன்றவரை பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அனைவரதும் கடமையாகும். தூரநோக்கற்ற செயற்பாடுகளாலும், வெற்று விமர்சனங்களாலும் அவை இல்லாமற் போவதும் பின் வருத்தப்படுவதும் வழக்கமாகி விட்டது.

எனவே நீங்களும் எழுதலாமின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களின் பங்களிப்பை பெரிதும் வேண்டி நிற்கிறோம்.

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர்- பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார்"
கவிதை ஈனநிலைகண்டு துள்ளும் ஆயுதமாக
"தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி"

நீங்களும் எழுதலாம்
அன்புடன் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிவு!

ஆறறிவு உள்ளதென ஆர் அறிந்து
ஆருக்கு அனுபவமாய் சொன்னார்?
பாரறிவு உள்ளதென்றால் பாரழி செய்வது யார்
பட்டறிந்து உள்ளபடி சொல்லிடுக!

ஐந்தறிவு உள்ளவைகள் ஐக்கியமாய் வாழ
ஐந்தென்று சொல்லுவதில் நியாயமென்ன?
எந்தறிவு இருந்தாலும் ஏறுமாறாய் நடக்கும்
எழுத்தறிவுக்கும் இறைவன் பாடென்ன?

காகமும் கருங்குரங்கும் காட்டெருமையும்
காத்திருந்து கழுத்தறுப்புச் செய்வதில்லை
தாகமாய் இருக்கும் தனித்துவ மனித நிலை
தாயைக் கூட இலாபமென்றால் கொல்லும்

போகவிட்டு புறஞ்சொல்லும் புல்லுருவி
போதைக்கு அடிமையாகும் ஈனப்பிறவி
பாகத்தைப் பிரித்தெடுக்க படுகுழியில் தள்ளும்
பாதகக் கூட்டணி மனிதனன்றி வேறுயார்?

ஓரறிவு உள்ளவையும் ஓரணியில் கூடுதுபார்
ஒழுக்கத்தை உச்சரிக்கும் பிறவியோ வேறாகி
நேரமில்லையென்று நேரத்தை வீணடிக்கும்
நேர்மையற்ற பிறவி மனிதனன்றி வேறுயார்?

சீராக வாழ்வமைக்க சீர்திருத்தம் செய்தே
சீரழிந்து போன இனம் மனிதனன்று வேறுயார்?
நாராக உரிபட்டு நாதியற்று போயும்
நடுத்தெருவில் பாதியாவதுமனிதனன்று வேறுயார்

ஊரறிவு இருந்தும் ஊரைவிட்டு ஊர் தேடி
ஊதாரியாகிப் போகும் கேடுகெட்ட பிறவி
பேரறிவுஉள்ளதென பிதற்றுவதில்நியாயமில்லை
பேச்சுத்தான் பல்லக்கு நடைமுறை தலைகீழ்

ஆசையை வளர்த்தே அழிவை அறுவடைசெய்ய
ஆசைப்படும் பிறவிக்கு ஆறறிவு இல்லையப்பா
காசையே நோக்காக்கி காரியம் புரியும்
கயமைப்பிறவிக்குச்``செக்கென்னசிவலிங்கமென்ன

செ.ஞானராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணப் பறவை

சிறையறைக்குள் ஒரு
சிட்டுக் குருவியின் கூடு
ஆண் பெண் என்று
இரண்டே ஜீவன்கள்..

கூண்டை விட்டு
குதூகலமாய் வெளியே வந்து
மின்சாரக் கம்பியிலிருந்து
சம்சாரத்துடன்
சல்லாபம் செய்கிறது
ஆண் குருவி..!

அதை
அன்பாக அனுசரித்து
ஆரத் தழுவி இன்பமடைகிறது
பெண் குருவி

ஆயுள் கைதியின் மனம்
நேற்றைய பொழுதுகளை எண்ணி
நினைவோடையில் நனைகிறது.
சாய்ந்த பொழுது சங்கதிகள்
சிறைக்கம்பி தாண்டி
சிறகடித்துப் பறக்கிறது...

# பெரும்பான்மைகளே..

உள்ளம் நொறுங்கிப் போன
இன்றுகளில்
ஏனையோரிடமிருந்து
ஒதுங்கி கிடக்கின்றேன்!

மனதில் முட்டித் தெறிக்கும்
நெடுங்கால வினாக்களை
உங்களிடம்
விட்டு விட்டுச் செல்கிறேன்!

இதயத்தின் இதயத்தை
முள்ளாக தைத்திடும் வார்த்தைகளை
எப்படி எங்கிருந்து பெற்றீர்கள்?

நம்பிக்கை கீற்றுக்களை
நாசப்படுத்தும் செயல்களை
மீண்டும் மீண்டும்
எதற்காக செய்தீர்கள்?

வலி சுமக்து
விழிநீர் விடும்படியான
ஒரு கஷ்ட காலத்தை எப்படி எனக்களித்தீர்கள்?

பொறுத்துப் பொறுத்துப் போன
அன்றுகளை
புறக்கணித்தே எம்மை
புனிதப் போருக்குத் தள்ளினீர்கள்!

விவேகானந்தனூர் சதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிதல்.....

கண்ணுக்குள் ஏதோவொரு
வர்ண இறகொன்று
வானில் மிதந்தபடி
காற்றில் பயணித்தபடி.....

* * *

கால்களுக்கருகினில்
தொட்டும் தொடாமலும்

* * *

இறகினுள்ள நிறங்கள்
கை தேர்ந்த ஓவியனின்
அதிசயத்தக்க மூளையினால்

* * *

மனதில் படிந்த உணர்வானது
இறக்கையினை விழுங்கி மகிழ்ந்து
அற்புதமாகி அதிசயமாகியும்

தடவுதலின் குதூகலிப்பில்
இறகினை பிரிந்த அந்த
பறவையினை அறியாத படி

*திருமலை சுந்தா*

# தெருக்குரல்

எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் பதிலடி
கொடுத்தால்
இல்லாமல் போகும் உறவு

* * *

புகழ் பெற யாவருக்கும் ஆசையுண்டு புகழும்
படியாய்
இகத்தில் வாழத் தெரியவில்லை

* * *

காட்டு விலங்குகளால் இல்லாத ஆபத்து
நாட்டில் கெட்டவராய் முட்டாளரால் உண்டு!

* * *

உன்னைப்போல் பிறரையும் நேசியாததே-
உள்நாட்டு
தன்வீட்டு பிரச்சினைகட்கு கால்!

* * *

வாலில்லா மிருகமாய் திரிகிறார்,
மனிதனாய்
வேடமிட்டு தினம் நடிப்பாரே இவர்.

* * *

*சூசை எட்வேட்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு

போதும் போதுமென,
தவித்து வரும் மிருகங்களுக்கெல்லாம்
'பருகு' 'பருகு' என
தண்ணீரும் தரும் குளம் நான்

என்செய்ய, இப்போ கோடை காலம்.
வறண்டு கிடக்கின்றேன்.

எவருமெனையிப்போ எட்டிப்பார்ப்பதுமில்லை.
எனினும்,
மிருகங்களெல்லாம் கூடிக் கூடி
பழைய என் நிலையையெண்ணிப்
பரவசமாயும்,
இற்றை நிலையையெண்ணி பரிதாபமாயும்
பகர்கின்றவனவாம்.
இன்னுமே,
தண்ணீரினருமை தெரியாச்சில மிருகங்கள்
பரிகாசமாயும் உரைக்கின்றனவாம்.
காற்றுவாக்கில் கதைகள் வருகின்றன.

எனினும், காலம் மாறும்.
காற்றுந்தூசும் கலந்து, வயிறு பிளந்து
காத்திருக்கிறேன்.
ஓர் நாள்,
இடியென பிரசவ வேதனை மீதுறும்
ஒலியெழுப்பி
மின்னலாய் பூரித்து
வானமகள் அமுதமெனக் காலமழையைப்
பிரசவிப்பாள்.
பிறகென்ன,
மல்லாந்து கிடக்குமென்னில் தாகமும்,
தாபமும் தீர
நக்கிக் குடிக்கவும், புரண்டு
சூடிறக்கியுல்லாசித்திருக்கவுமென
எல்லாரும் வருவினம், எல்லாரும் வருவினம்.
உள்ளார்ந்த நேசத்துடன்
எல்லாவற்றையுந் கொடுப்பதற்கெனக்
காத்துக்கிடப்பினும்
என் செய்ய, இப்போ கோடை காலம்
வறண்டு கிடக்கின்றேன்.

*ஏறூர் நஸீலூர் கண்ணதாசன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வறட்சி வேண்டாம்

## புன்னகை வேந்தன் - மருதமுனை

ஆன்மீக வரட்சியினால் அகிலமெங்கும்
அட்டகாசம் அலங்கோலங்கள் மகுடம் சூடி
மாண்பியங்கள் அனைத்தையுமே நாசமாக்கி
மீளாத்துயில் கொள்ள வைத்த தனாலே
சத்தியம் சன்மார்க்க நெறிகளெல்லாம்
செல்லாக் காசாகி போனதே உண்மை
நித்திலக் குவியலாம் நிமலன் அருளும்
நிலைக்காமல் போனதும் துர்ப்பாக்கியம் தான்

பஞ்சசீலக் கொள்கையினால் புத்த பெருமான்
புவனத்தில் புண்ணியங்கள் செய்ய வந்தார்.
துஞ்சாது துணிச்சலோடு தூய நெறிகள்.
தாரணியில் ஓங்கிடவே பாடுபட்டார்.
இந்து மதம் சொன்ன வழி பகவத் கீதை
இழிவான செயலனைத்தும் இல்லா தொழித்து
சிந்தனைகள் மகோன்னதம் பெறுவதற்கே
செம்மையான வழி முறைகள் செய்ததுண்மை.

பரிசுத்த விவிலியமும் மானிடத்தின்
பெருமதியைப் பார் மீதில் ஓங்க வைத்து
உருவாக்கம் செய்திடவே உழைத்த துண்மை
உண்மைக்கு முதலிடம் கொடுத்த துண்மை
இறைதூதர் முஹம்மதுவின் போதனைகள்
இஸ்லாத்தினை வேத நூலாம் அல்-குர் ஆனும்
கறையகற்றிக் காசினியில் இறை யோனருளும்
குறைவில்லா திருந்திடவே சொன்ன துண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சப் பெரும் பரப்பில் இப்போ தெல்லாம்
பித்தலாட்டம் வக்கிரங்கள் இமால யமாக
பிரபல்யமாகுவதே யதார்த்தமாகும்.
பின்னடைவும் பிணக்குகளும் வேகமாகி
விருந்தோம்பல் நல்லெண்ணம் மானிட நேயம்
வேரறுந்து வீழ்வதையே காணுகின்றோம்.
திருந்தாத உள்ளங்கள் உள்ள வரையில்
தீமைகளே உச்ச நிலை கொள்ளுமாமே!

மாதர்குலம் தாய்க்குலம் என்ற எண்ணம்
மனதுக்குள் இல்லாத காரணத்தால்
பாதகங்கள் கற்பழிப்பு அதிகரித்து
பார்மீதில் ஆன்மீகம் வறண்டதுண்மை
ஆன்மீக மேம்பாடு ஓங்கிவிட்டால்
வீண்வம்பு வாதங்கள் மாண்டு போகும்.
வாஞ்சையினால் எங்கிலுமே சாந்தி தானே.



சிரேஸ்ட ஊடகவியலாளர் அமரர். சின்னையா
குருநாதன் முதலாம் ஆண்டு நினைவு
02.09.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரா அமைதி கொள்!!

ஐயறிவு வென்றது
பகுத்தறியும் ஆறறிவை!
அடக்கமாய் அமைதியாய்
பிடித்தெடுத்தாய்
கடத்தல்காரர்களை
கிள்ளி எறிந்தாய்!
உனைக் காணவே
எகிறும் கால்களே
சான்று சொல்லும்
யார் குற்றம்
யார் சுற்றமென்றும்!
காவல் துறையின்
நண்பன் நீ கோரா!
மனித இனத்தின்
காவலன் நீ கோரா!
களைத்தெறிந்தாய்
கள்வர் கூட்டத்தை!
மோப்பம் செய்தாய்
மடக்கி விட்டாய்
மோச கயவர்களை!
கோரா எட்டாண்டு
உந்தன் வயது
அதில் உன்னதம்
உந்தன் சேவை!
அளப்பரிய அருமை
உந்தன் சிநேகம்!

நீங்களும் எழுதலாம் இதழின்
வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும்
உங்கள் ஆதரவை
எதிர்பார்க்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றும் முற்றும் பார்த்து
புற்றும் புதறும் ஓடியோடி
ஒன்றல்ல இரண்டல்ல
அறு நூற்றைம்பது
குற்றவாளிகளைப் பிடிக்க
கை கொடுத்தவன் நீ!
இறுதியில் புற்று நோயும்
ஹற்றன் நிலையத்தில்
புதிர் செய்தது உன்னை!
மனித களைகளை
பிடுங்கி எறிவதில்
உனக்கு நீயே நிகர்!
காவல் துறை இழந்தது
ஓர் நாணய வீரனை!
நீ இறக்கவில்லை கோரா!

நிரந்தர துயில் கொண்டு
ஓய்வு கொண்டாய்!

**எஸ். ஏ. இஸ்மத் பாத்திமா**
பஸ்யால.

கவிதைக்கான

பயில்களம்
பரிசோதனைக் களம்
காத்திரத்தின் களம்
கருத்தாடற் களம்
விளக்கக் களம்
விமர்சனக் களம்

} நீங்களும் எழுதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் ஒரு குயிலும்

சுந்திரமாய்ப் பாடுகின்ற
சோலைக்குயிலே - இன்று
சோகமுடன் பாடுவதேன்?
சொல்லு குயிலே....!
மாமரத்துக் கிளைதனிலே...
அமர்ந்திருப்பாய் - நீ
மகிழ்வுடனே இசையெடுத்து(ப்)
பாடிடுவாய்,
காலையில் குரல் கேட்டே
கண் விழிப்பேன் - உன்
கனிவான இசைதனிலே
எனை மறப்பேன்
காதலனை காணாத
துயரத்திலா? இல்லை
கை விட்டுப் போனானென்ற
கவலையிலா?
கண்ணீரில் தோய்கின்ற
குரலெடுத்தாய் - என்
நெஞ்சத்தைப் பிழிகின்ற
துயர் கொடுத்தாய்
அழுகின்ற உன் குரலை
யார்? அறிவார் - குயிலே
கூவுகின்ற அழகென்றே
பலர் மகிழ்வார்,
காற்றோடு கரைகிறதே!
கடுஞ்சோகம் - அந்த
கவலையிலே தெரிகிறதேஉன்மோகம்
திசையெல்லாம் உன் கூவல்
எதிரொலிக்கும் - அவன்
திரும்பிடுவான், உன்கூடல்
பயனளிக்கும்
காதலுன்னைச் சேர்த்து வைக்கும்
கலங்காதே....
காலமுன்னை வாழ வைக்கும்
மயங்காதே...!

- *கறுவாக்கேணி*
*முத்துமாதவன்* –

| |
|---|
| புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப்பெயர் முகவரியினையும் குறிப்பிடுதல் வேண்டும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கண்ணாடியில் கவிதை முகம்

சத்தமின்றி நிரம்பியது
மொத்த வியாபாரியின் சட்டைப்பை
நள்ளிரவு விலையேற்றம்.

ஒரு இனத்தை அழித்தவன்
இன்னொரு இனத்தின் மகாபுருஷன்
நாட்டின் சாபக்கேடு

தோல்வி கண்டது தீக்குச்சி
குப்பிவிளக்கில் சுடரேற்றி
குடிசையின் இயலாமை.

அநியாயக் காரரே உங்களை
ஆண்டவன் தண்டிப்பான்
சொன்னவன் சூடுபட்டு மரணம்.

நூறு வயது வாழ்வதெப்படி
நூலை எழுதியவர் மரணம்
அகவை ஐம்பதில்.

வாக்குறுதிகளை வழங்கு
நிறைவேற்றத் தேவையில்லா
அரசியல்.

வேண்டியவர் எதை எழுதினாலும்
விதந்துரைத்து எழுது
விமர்சனம்.

யுத்தத்தில் மரணித்தவர்களுக்கு
இயற்கை அன்னையின் அஞ்சலி
கோடையில் மாரி.

--ஷெல்லிதாசன்--



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி நவீனமும்
## அதிநவீன தாக்குதலும்.....?


நெஞ்சை விட்டகலா
நேய நெஞ்சகா,
விஞ்சுகின்ற நவீனத்தால்
கெஞ்சுகின்றேன் நண்பா....,
'வணக்கம்' – முதலில் உனக்காக – நீ
வாழ வேண்டும் இன்னும்
வண்ணத் தமிழ் போல என்பதற்காக?
எப்படி நலமா...?
ஏற்றமும் மாற்றமும் பெற்றாயா?
அப்படித் தான் இன்னும்
அசிங்கத்தை நோக்கிய
அதிநவீன நகர்வா?
மின்னஞ்சலாக இது அல்லாததாக...
"மின்னஞ்சல்" அஞ்சலாக
உன்னில் மின்னலாக
மின்வைக்கும் வைர வரிகளாக...!
புதுவருடம் வந்தாச்சே – ஆகா...!
"புது நடுகை" நட்டாச்சா...???
எதுவுமே நடவில்லை என்றே
எனக்குச் சொன்னதே காற்று வந்து...???
நட்டதுவோ மீண்டும்
நவநாகரிகச் சாக்கடைதானா?
தொட்டதுவோ நீ மீண்டும்
ஊர்சுற்றும் படலம் தானா?
சூப்பிய பனம்விதை மாதிரியே
பாதித்தலை...???
சூப்பாத பனம் விதை போன்றே
மீதித் தலை...???
உன் உடலில் காதல் ஓவியமா?
அட ஒரு காதலில் தங்கையின் தோடுமா?
என்னடா உன் கோலம்,
எதற்கடா இத்தனை ஏற்பாடு?
உன் 'இல்' விளக்குக்கு
எண்ணெயில்லையே
உனக்கோ அந்த எண்ணமில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமயமானவனே - சிந்தியடா
வண்ணமுறுமா வாழ்க்கை கூறடா...
உன் வீட்டு ஆட்டுக்குட்டியினை
ஆரோ நேற்று அவிட்டுச் சென்றார்களாமே
உன் வீட்டை வாடகைக் கென்றேன இன்று
யாரோ கேட்டுச் சென்றார்களாமே...
நீ பேசும் மொழியிலும் சீண்டலாய்
நீ வாழும் நிலத்திலும் சுரண்டலாய்
தீயும் பற்றுமே நீயாக நீ இன்றேல்...
தாயின் மடியில் தத்துவம் படித்துவிட்டு வா...
வள்ளுவரின் புத்தரின் வியப்புறும் பாடமும்
படி...?
நபியும் இயேசுவும் நவின்ற பாடமும் கேள்...?
அநாவசியமும் அலங்கோலமும்
இனியும் உன்னில் அரங்கேறின்
அதி நவீன தாக்குதலை
நடத்துவேன் நாளையும்
ஆயுத பாணியாக அல்ல -
அப்பாவியாக!

**கன்னிமுத்து வெல்லபதியான்,**



Easy Learning English grammar and Competition நூல் வெளியீட்டில் 02.02.2019 எஸ்.ஆர். தனபாலசிங்கம், பிரதம விருந்தினர் கௌரவ க. துரைரெட்ணசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர், விருந்தினர்களான எம். தமிழ்செல்வன் விரிவுரையாளர், கே.பவானந்தம் விரிவுரையாளர்.கே. குலரதன் விரிவரையாளர், ரி.ரவிதாஸ் அதிபர். ஆய்வுரை நிகழ்த்திய கே.சித்திரவேலாயுதன் ஆங்கில ஆசிரியர், நூலாசிரியர் ஆர்.என். பிரதீபன்

படம் பக்.37 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இது தான் உண்மை"

மதம் சார்ந்த வாழ்க்கையிலே
புனித முண்டு: இலட்சுமி
வாசம் செய்வாள் அவ்வீட்டில்
மகிழ்ச்சி பொங்கும்

மது போதை பாவனைகள்
உள்ள வீட்டில்: என்றும்
மகாலக்சுமி நுழையமாட்டாள்
வளரும் தொல்லை

ஊழல் செய்து பொருளீட்டும்
வீட்டி லென்றும் அமைதி
பாழாகும் மகாலட்சுமி
வரவே மாட்டாள்

வாள் வெட்டு கொலை களவு
வன்பு ணர்வு புரிவோரில்லம்
மகிழ்ச்சி கெட்டு மாசடையும்
மகாலட்சுமி மறைவாள் திண்ணம்

ஏமாற்றி வாழ்வோர் இல்லம்
ஏற்றம் ஆகா என்றோ ஓர் நாள்
அவ்வீட்டார் கூட இங்கு
ஏமாற்றப்படுவார் உண்மை

சேனையூர்
அ.அரசரெத்தினம்

அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகு

தாய் தந்தை பாதமே
சொர்க்கம் : பின்
தான் கொண்ட தாரமே
ஆதாரம்!
உழைத்துண்டு வாழ்தலே
இன்பம் :பிறர்
உழைப்பை திருடுதல்
பாவம்!
தன்மானம் காப்பது
வீரம்: கவரி
மான்போல் வாழ்தலே
புனிதம்!
இரந்துண்டு வாழ்வது
இழுக்கு: வாழ்வில்
இழுக்கு வராமல் காப்பதே
சிறப்பு!
கற்பதை கசடறக்கற்று
நற்பணி புரிவது
சற்குண மாணவர்க்கு
அழகு!

மனிதாபி மானமே
பெரிது: இதனை
மதித்து நடப்பதே
மனித பிறப்புக்கு
மதிப்பு!

"சேனையூர் அ.அச்சுதன்"

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியானவள்

முல்லைவீரக்குட்டி

யாமறிந்த மொழிகளிலே தமிழைப் போலும்
நாவினிக்க நலங்கனிந்த மொழிவேறில்லை!
பாமரர்க்கும் பண்டிதர்க்கும் இனிமை சொட்டும்
பசுந்தேனாய் நாநனைந்து புரளும் வண்ணச்
சீரமைதி பெற்ற தமிழ்ச் சிறப்பை எல்லாத்
தேசத்திலும் பரவச் செய்வோமென்று
பாவமைத்தான் பாரதி பல் மொழியை விஞ்சி
நாவினித்த தால் தமிழே நயந்ததென்றான்!

கன்னடமும் களிதெலுங்கும் கவின்செறிந்த
பண்மொழியும் உன்னுதரம் தனிலிருந்தே
வந்ததென மனோன் மணியம் தந்த செம்மல்
தமிழாசான் புனைந்தகவி பருகியுள்ளோம்!
இன்னுமவர் ஆரியம் போல் உலகவழக்
கழியாவுன் திறன் வியந்தார் முழுமை பெற்ற
மன்னு தமிழ் மண்ணுலகில் நிலைபேறான
மகிமை நிறை செம்மொழியென் றாயிற்றின்றே!

அகத்தியனார் பொதிகையிலே வளர்த்தாருன்னை
அவர்பின்னால் காப்பியன் தொல் குழுமத் தோடு
தகமைமிகு இலக்கண நூல் பலதும் தந்தார்
தமிழென்றால் தரணிவியப் பெய்துமென்றே
அகமகிழ்ந்து தமிழ் வளர்த்தா ரான்றோரன்னாள்
அற்புதமாம் அருங்கலைகள் தேடிச்சேர்த்தார்!
மிகவுயர்ந்த வைத்தியத்து வாகடங்கள்
மிகையாக வானியலும் புரியத்தந்தார்!

கீரனொடு மாமூலன் பரணன்மோசிக்
கீரன் நல் லந்துவன் நன் முல்லை ஒளவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிகிழார் நெட்டிமையார் காவற்பெண்டு
கபிலன் கண் ணகன் முதலோர் புனைந்து சென்ற
சீரியசெந் தமிழ்ச்சங்கக் கடலுள்மூழ்கிச்
சிறப்புறு நல் வலம் புரியும் முத்தும் சேர்ப்போம்!
பாரிலுயர் மொழிகளிலே உயர்ந்ததெங்கள்
பசுந் தமிழாள் என்றைக்கும் பசுமையாளே!

சிலம்போடு துகில் சிந்தா மணியும் பத்தும்
சீர்தொகைகள் எட்டோடு பதினெ ண் கீழாம்
அலங்காரத் தொகை நூல்கள் தொன்று தொட்டு
அணிசேர்க்கக் காவியந்திருக் குறளினோடு
பல நூறு பாசுரங்கள் யாவும் சேர்ந்து
பைந்தமிழைச் செம் மொழியாய் மகுடம் சூட்டி
நலமோங்க அரியணையில் அமரச் செய்த
நலம் நினைந்து மகிழ்கின்றோம் தமிழே வாழி!

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழி பெயர்ப்பும் கவிதைகளும் எதிர்பார்க்கப் படுகின்றன.

தனியிதழ் ஒன்றினை தபால் மூலம் பெற விரும்புவோர் 25/= பெறுமதியான மூன்று முத்திரைகளை (75/=) அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆக்கபூர்வமான விமர்சனங்கள், கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்மப்பிரஷன் கவிதைகள்

காதலிலிருந்து காமத்தை
பிய்த்தெடுக்கிறேன்
வெறுமையாயிருக்கிறது
வாழ்க்கை
வெண்மையில் ஒட்டியிருக்கும்
கரும்புள்ளியை
தேய்க்கிறேன்
மீண்டும்
ஒட்டிக் கொள்கிறது
காதலில் காமம்'

.................................................

நீ
கிழித்துப் போட்ட
இதயத்துண்டங்களை
தணலிலிடுகிறேன்
அவை
சிலவேளைகளில்
நறுமணமாயும்
சிலவேளைகளில்
வியர்வை நாற்றமாயும்
சில
இரத்த நெடிலாயும்
சில
ஒரு குழந்தையின்
பால் மணமாயும்
புகைகின்றன.

இதயத்தில்
என் கவிதைகளும்
இருந்திருக்க கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுமோ விஷப்பரீட்சை

அமாவாசை கருக்கலில்
உக்கிப்போன சடலமாய்
உணர்வற்றுக்கிடக்கிறது உலகம்
பேய் பசாசுகளின்
வக்கிரத் தோற்றத்தில் மானுடம்
கொல்லன் உலையில்
பழுக்ககாய்ச்சிய இரும்பாக
கொதிப்பாகி உக்கிரமாய்
யாரின் அடிவயிற்றில்
சூட்டுக்கோல் போடலாம் என
துடித்துக் கொண்டிருக்கிறது இதயங்கள்
ஏன்.... எதற்காய்......?
மாற்றானின் மண்டையோட்டில்
மதுவருந்த துடிக்கும்
சாத்தான்கள் சதிவலைக்குள்
சல்லடையாகும் வரால்களோடு
குரட்டைகளும், பனையான்களும்
குடி மூழ்கிப்போகும் சில கணங்களில்
தீண்டலும் தூண்டலும்
எழுதப்படாத சத்ய வரிகளாய்
பகுத்தறிவைப் பாடையிலேற்றி
குளிர்காயும் குரூரமாய்
மிக மிகக் கொடூரமாய்
தனியொருவனுக்கு
சுதந்திரம் இல்லையெனில் உலகை
சுக்கு நூறாக்கச் சொன்ன
பார் போற்றும் பாரதியாரின்
இலட்சியக்கனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தாயின் அடிவயிற்றில்
இடி விழச் செய்யும்
எமகாண்டங்களில்
இதயமற்ற இனவாதத்தால்
ஓலங்களும் அவலங்களும்
வேண்டுமோ விஷப்பரீட்சை
விண்வெளியில் கால் பதித்தோம்
அதற்கு அப்பாலும் ஆய்வோம்
ஒப்பாரி வைக்கும் உலகாரே
உங்களைத் தான்.. எதற்கு.. ஏன்..
சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுக்கவா
சிம்மாசனம் ஏறி சிகரம் தொடவா
வெட்கமின்றி கொக்கரிக்கும்
வேதாந்திகளே: கொஞ்சம்
விழிதிறந்து பாருங்கள்
உங்கள் வெடிகுண்டுப் பரீட்சையினால்
வெந்து சாம்பராகிப் போன
அந்த அப்பாவிகளின்
இன்னும் வேண்டுமோ
விஷப்பரீட்சை

***கே. எம். ஏ. அஸீஸ்***
***சாய்ந்தமருது***



கரவை மு. தயாளன் இரு நூல்கள் வெளியீட்டில் 21.10.2018 புளியமரம் (சிறுகதைத்தொகுதி) குறும் பாக்கள் ஆகிய இருநூல்கள் வெளியீட்டில் கரவை மு.தயாளன் பிரதமவிருந்தினர், திருமதி வளர்மதி இரவீந்திரன் (கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர்) மைக்கல் கொலின், திரு குலேந்திரன் நந்தினிசேவியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழல்

கருமை மட்டும் பொதுவாய்
கூடவே வருவாய் அழகாய்…
காற்றுபுகும் இடைவெளி
இருவருக்கும் இருந்திடவும்
இலகுவான தோழமை நீ தந்தாய்…
இந்த மூச்சு அடங்கிய பின்னும்
என் பின்னே வருவாய்…!
வலித்தாலும் வதைத்தாலும்
உனக்கேதும் வலியில்லை – ஆனாலும்
வாழ்வின் வழித்துணையாய் வருவது
நிழல் எனும் நண்பன் நீ மட்டும் தான்…!

## நெருப்பு

அன்னத்தை சமைக்க
அந்த ஆதியிலே உருவானதாம்
இருமனம் இணையுமாம்
உன்னை சாட்சியாக்கி
நீ வேண்டுமாம் இதமாய் குளிர் காய
சீதையின் புனிதம் காத்தாய்…
வேதத்தின் ஓமத் தீயானாய் !
ஏற்றத்திற்கும் நீயாம் !!
எத்தனையோ அழிவிற்கும் நீயாம் !!
முள்ளியில் உன் கிரணங்களால்
கொள்ளி வைத்தாய் பலருக்கு
அடேய் மானிடா !!!
யாராக இருப்பினும் இதன் பிடிக்குள்
சிக்குண்டு ஒரு பிடியாகத் தானே
வேண்டும்……

*திருமலையாள்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்



பூத்தது தமிழ் நூல் வெளியீட்டில் 25.08.2018
நூலாசிரியர் : வி. நவரெத்தினராசா பிரதம விருந்தினர் கௌரவ க. துரைரெட்ணசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். விஜேந்திரன் (வலயக்கல்விப்பணிப்பாளர்) எஸ். ஆர். தனபால சிங்கம் ஆசிரியர் நீங்களும் எழுதலாம்.






முத்த எழுத்தாளர் டாக்டர் இராஜதர்மராஜா நினைவேந்திதல் நிகழ்வு – 03.02.2019
முதல் சுடரினை கலாந்தி சரவணபவன் ஏற்றி வைப்பதையும் திருமலை நவம், யதீந்திரா லக்ஸ்மணன் , ஜெயப்பிரகாஷ் ஆகியோரையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம்
# ஓர் ஆய்வு
## மிஷாந்தி செல்வராஜா

முதுகலைமாணி பட்டப்படிப்புக்காக
செல்வி மிஷாந்தி செல்வராஜா
அவர்களினால்

நீங்களும் எழுதலாம் கவிதையிதழ் (1-21 வரை) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2013ல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி சுருக்கித் தரப்பட்டுள்ளது.



"நீங்களும் எழுதலாம் சஞ்சிகை – ஓர் ஆய்வு"

பெயர் :- செல்வி. மிஷாந்தி செல்வராஜா

பதிவு இல :- FGS/MAT/2011-2012/20

சுட்டெண்:- MAT - 119

தமிழ் முதுகலைமாணி இறுதிப்பரீட்சை 2011 – 2012ன் தேவையினைப்பூர்த்தி செய்கின்ற ஓர் அலகாக இவ் ஆய்வுக்கட்டுரை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்திற்கு 2013ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

தமிழ் முதுகலைமாணிக்கற்கைநெறி,

உயர் பட்டப்படிப்புக்கள் பீடம்,

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்,

இலங்கை

20..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வு முன்னுரை

ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியவைகளாகப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் காணப்படு கின்றன. இந்தவகையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பல பத்திரிகைகளையும் நாம் வாசித்தறிய முடிகிறது. அண்மைக்காலத்துத்தமிழ் இலக் கியப்பணி ஈழத்தில் வெற்றியுடன் முன்னெ டுத்துச் செல்லப்படுகின்றதைக் காண்கிறோம். இதற்குச் சஞ்சிகைகளும் காரணமாக விளங்குகின்றன. இந்தவகையில் அண்மை காலமாகத் தொடர்ந்து வருகை தந்து கொண்டிருக்கும் நீங்களும் எழுதலாம் சஞ்சிகையும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்து வருவதை அவதானிக முடிகின்றது.

இச்சஞ்சிகையில் வெளிவரும் பல்வேறு ஆக்கங்களும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றி வருகின்றன. அத்துடன் நூல்களை அறிமுகம் செய்து வருவதன் மூலமும். களங்களை விரிவுபடுத்தியும் தனது பணியை மேற்கொள்கின்றது.

நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் முழு ஆக்கங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துவது என்பது ஆய்வின் எல்லையை விரிவுபடுத்து வதாக அமைந்துவிடும். இதனால் நீங்களும் எழுதலாம் சஞ்சிகையில் 1-21 வரையுள்ள (ஒன்று தொடக்கம் இருபத்தொன்று) இதழ்களில் உள்ள கவிதைகள் கட்டுரைகள், விமர்சனங் கள், மூலமும் பெயர்ப்பும். பாடுபொருட்கள், அட்டைப்படங்கள் என்பவற்றையே பிரதான மாக ஆய்வு செய்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு இயல்களாக இந்த ஆய்வு முன்னெடுக்கப் படுகின்றது. முதலாவது இயல் ஆய்வு அறிமுகத்துடன் அமைந்துள்ளது. இரண்டாவது இயலில் நீங்களும் எழுதலாம் வளர்ச்சிப் போக்குப்பற்றியே கவனம் செலுத்தியுள்ளேன். மூன்றாவது இயலில் பாடுபொருட்களை ஆய்வு செய்துள்ளேன். நான்காவது இயலில் கட்டுரை விமர்சனம் என்பவற்றை குறிப்பிடுகின்றேன். ஐந்தாவது இயலில் மொழிபெயர்ப்புக் கவிதை கள், அட்டைப்படங்கள் என்பவற்றைப் பற்றிக் கூறியுள்ளேன்.

இன்றைய உலகில் நவீன தொடர்பு சாதனங் களின் பெருக்கம் அதிகரித்த வேளையிலும் அதனையும் தாண்டி சமூக, இலக்கிய ஆர்வத்துடன் செயற்பட்டு வரும் நீங்களும் எழுதலாம் சஞ்சிகை ஆய்வு செய்வதில் ஆய்வாளன் ஆகிய நான் மனம் பூரிப்படைகின்றேன்.

## நீங்களும் எழுதலாம் கவிதை இதழ்களின் தோற்றப் பின்னணியும், வளர்ச்சிப்போக்கும்.

அச்சு ஊடகங்களின் தோற்றமும் பரம்பலும் சிற்றிதழ்களின் உருவாக்கத்திற்கும் பல்வேறு விதங்களில் வழிவகுத்தது. கலை இலக்கியம், அறிவியல், சமூகவியல், மருத்துவம், சமயம், சோதிடம் எனப்பல துறைகளையும் சிறப்பாகக் கவனத்திற்கொண்டு அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான இதழ்கள் தோற்றம் பெற ஆரம்பித்தன. மேலும் மாதாந்த, வாராந்த அச்சு ஊடகங்களின் விரிவாக்கம் பரந்த அடிப்படையிலான (அதிக எண்ணிக்கையான வாசகர், பரந்த பிரதேசம், பல்துறை விடயங்கள்) ஜனரஞ்சகமான பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைகள் (வணிக சஞ்சிகைகள்) ஒரு புறமாக சில நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவிலான வாசகர்களைக்கருத்தில் கொண்டு வெளிவரும் சிறு சஞ்சிகைகள் மறுபுறமாக வளர்வதற்கு இடமளித்தது (வசதியளித்தது) இவற்றுள் சிற்றிதழ்களே காத்திரமான சமூக அசைவியக் கத்தை ஏற்படுத்துவனவாகக் காணப்படு கின்றன.

மேற்கூறிய நிலைமையின் வளர்ச்சிதான் நவீனகலை இலக்கிய வடிவங்களின் பெரும் கூறான கவிதையை தனித்தும் நுனித்தும் நோக்க வேண்டியேற்பட்டமை. தமிழில் நீண்டகாலமாக இருந்து வந்த செய்யுள் மரபின் தொடர்ச்சியாக கவிதை, நவீன கவிதை, புதுக் கவிதை என ஏற்பட்ட நீட்சி பலரது கவனத் தையும் ஈர்த்தது. சிறுகதை, நாவல் போன்ற வடிவங்கள் தமிழுக்குப் புதியனவாக அமைய கவிதை மரபில் இருந்து மாற்றம் பெற வேண்டிய தேவையொன்று எழுந்தது.

ஈழத்தைப் பொறுத்தவரை 1955இல் வெளிவந்த தேன்மொழி என்னும் இதழே (ஆசிரியர்கள் தி.வரதராசன், மகாகவி) முதலாவது கவிதை இதழாக அறியக் கிடக்கிறது. நீண்டதோர் இடைவெளியின் பின் கிழக்கிலங்கையில் இருந்து 1969இல் வெளிவந்த கவிஞன் இதழ் (ஆசிரியர்கள் :- M.A. நுஃமான், சண்முகம் சிவலிங்கம்) மரபு - எவ்வாறு மாற்றம் பெறுகின்றது எனும் ஆரோக்கியமான கட்டுரைகளோடு மரபுக்கவிதையோடு இலக்கண வரம்பு மீறிய புதுக்கவிதைப் பாரம்பரியத்தையும் இணைத்துக் கொண்டு பெரும் பங்காற்றியது. துரதிஷ்டமாக நான்கு இதழ்களுடன் தனது ஆயுளை முடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ஆம் ஆண்டின் காலப்பகுதியில் ஈழத்தைப் பொறுத்தவரையிலும் சரி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் சரி, கவிதைப்போக்கில் பல மாறுதல்கள் ஏற்பட்ட காலம் தமிழ் நாட்டில் வானம் பாடியின் தோற்றம் புதுக்கவிதைக்கு புது இரத்தம் அளித்தது. இது போலவே ஈழத்திலும் பல புதுக்கவிதையாளர்கள் தோற்றம் பெற்றனர். கவிஞர் இ.முருகையன், இ.இரத்தினம் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு 'நோக்கு' இதழ் வெளிவந்தது. அனைத்தும் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளே மடிந்தன.

1980களில் 'பூபாளம்' என்னும் இதழ் நான்கு இதழ்களுடன் நின்று கொண்டது. 1983இல் கல்முனையில் இருந்த "தூது" என்னும் இதழும் வெளிவந்து நின்றது. 1990களில் அடுத்து ஓர் நீண்ட இடைவெளியின் பின் குறிப்பிடத்தக்கதாக 'கவிதை' என்னும் இதழ் (ஆசிரியர் அ. யேசுராசா) 1994 இல் இருமாத இதழாக வெளிவந்தது.

1995இல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக ஒன்பது இதழ்களுடன் நின்று போனது. பெரும்பாலான இளம் கவிஞர்களுக்கு களம் கொடுத்து இளையவர்களின் நேர்காண லையும் பிரசுரித்து ஊக்கமளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டில் வாழைச்சேனை நண்பர் இலக்கியக்குழுவின் வெளியீடாக மிலேனியம் இதழாக "யாத்ரா" காலாண்டிதழ் ஆரோக்கிய மாகத்தனது பயணத்தைத் தொடர்ந்தது. பெரும்பாலும் கொழும்பைத்தளமாகக் கொண்டு இயங்கிய யாத்ரா பல கவிஞர் களுக்கு களம் கொடுத்ததோடு மொழி பெயர்ப்புக் கவிதைகளுக்கு முன்னுரிமை அளித்தது. மேலும் நேர்காணல்கள் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான கட்டுரைகள் என்பவற்றிற்கு இடம் கொடுத்தது. இருந்தும் பத்தொன்பது இதழ்களுடன் யாத்ராவும் கவிதைக்கான தனது பயணத்தை நிறுத்தி முழுமையான கலை இலக்கிய இதழாக மாற்றம் பெற்றது. இத்தகைய கவிதை இதழ்களின் வரலாற்று ஓட்டம் தடைப்பட்ட பயணமாகவே அமைந்திருந்தன. கவிதை இதழ்கள் பல வெளிவந்த போதும் ஒரு சில இதழ்களே பெயர் குறிப்பிடும் அளவுக்கு நின்று நிலைத்து மறைந்திருக்கின்றன.

கவிதை இதழ் ஒன்று நின்று நிலைப்பதற்கு பின்வரும் சூழ்நிலைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. கலை இலக்கிய இதழ்களான ஏனைய இதழ்களோடு ஒப்பிடுகின்ற போது (சிறுகதைவாசகன், கட்டுரை வாசகன், தொடர் கதை வாசகன், துணுக்குவாசகன்) கவிதை இதழ் களுக்கான வாசகர்கள் குறைவு, இதனால் விற்பனை மிகக் கடினம். மேலும் தரமான ஆக்கங்களை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதில் சிரமம்.

2. கவிதை இதழின் நோக்கங்களை யும், செயற்பாடுகளையும் வரை யறுப்பதில் உள்ள சிரமம்.

3. தீர்மானிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றக் கூடிய அம்சங்களி னதும், செயற்பாடுகளினதும் தொடர்த் தேர்ச்சித்தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பல கவிஞர்களது கவிதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு நூல் என்ற தன்மையில் இருந்து கவிதை இதழ் ஒன்று பல அம்சங்களை உள்ளடக் கியதாக அதாவது வேறுபடுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. இடம் நிரப்பு முயற்சிகளை கவனமாகச் செய்ய வேண்டும். கவிதை சம்பந்தமான விடயங் களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை உள்ளடக்கக் கூடாது. அதாவது துணுக்குகள் போன்ற ஏனைய விடயங்கள்.
3. மட்டுப்படுத்தப்பட்ட தேர்ந்தெடுத்த வாசகன் என்பதனால் காத்திரத் தன்மை பற்றிய எதிர்பார்ப்பு அதிகம்.

மேற்கூறிய நிலைமைகளை (தடைகள்) கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டியதன் காரணமாக கவிதை இதழ்கள் ஒரு தசாப்த காலத்துக்கேனும் (10 ஆண்டுகள்) நின்று நிலைப்பது மாபெரும் விடயமாகும். எனவேதான் இந்தியாவிலும் சரி, ஈழத்திலும் சரி கவிதை இதழ்கள் எதுவும் இதுவரை ஒரு தசாப்த காலத்திற்குக் கூட நின்று நிலைத்ததில்லை. தமிழகத்தின் வானம்பாடி கூட ஏழாண்டு காலமே கானம் இசைத்தது. ஈழத்தைப் பொறுத்தவரை 90களின் பின்ன ரான ஏறத்தாழ இரண்டு தசாப்தங்கள் தமிழர் வாழ்வியல் போர்சூழலுக்குள் தவித்த காலம். பாதை அடைப்பும் சோதனைச் சாவடிகளுமே பல பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்புகளைத் துண்டித்திருந்தன. குறிப்பாக வடக்குத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இதன் காரணமாக தமிழ்த்தேசிய தினசரிகள் (ஆங்கிலம் உட்பட) கூட விநியோகம் செய்ய முடியாத நிலை. வார இதழ்களே விமான மூலம் விநியோகம் செய்யப்பட்டன. இதனால் சஞ்சிகைகள் சில வசதி கருதி கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்க ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநட்டுப்பத்திரிகைகள் குடாநாட்டிற்குள் முடங்கின. இதன் விளைவாகவே யாழ்ப்பாணத்தைத்தளமாகக் கொண்ட யாழ் தினக்குரல்.

இத்தகையதொரு சூழ்சிலையில் தனிப்பட்டவர்களினால் அல்லது சில வட்டங்களினால் வெளியிடப்படும் சஞ்சிகைகளே அவர்களது அக்கறை காரணமாக நாடு முழுவதும் பரவலான வாசர்களுக்குச் சென்றடைய முடிந்தது.

மேலும் இலக்கியப்படைப்பாளிகளுக்கு தமது உணர்வுகளை கருத்துக்களைச் சொல்ல தேசிய பத்திரிகைகள் களம் கொடுக்குமா? என்ற கவலை வேறு.

அவ்வாறு பிரசுரங்கள் குறுகிய ஒரு சூழ்நிலையில் குறிப்பாக இன்னும் இறுக்கமடைந்த ஒரு கட்டத்தில் தான் "தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி" என்ற பிரகடனத்துடன் திருகோணமலையில் இருந்து "நீங்களும் எழுதலாம்" என்று உற்சாகப்படுத்திக் கொண்டு 2007 மார்ச் - ஏப்ரலில் தொடங்கி இருமாதக்கவிதை இதழாக வெளிவருகிறது நீங்களும் எழுதலாம்.

இன, மத, பிரதேச எல்லைகளைகடந்து இளைய மூத்த தலைமுறையினரை இணைத்துக்கொண்டு அனைவருக்கும் களம் கொடுக்க வேண்டும் என்ற அவாவுடன் ஒரு கால கட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய தோற்றம் பெற்றது நீங்களும் எழுதலாம்.

படைப்புக்களின் கருத்துக்களுக்கு
படைப்பாளிகளே பொறுப்பாளிகள்
படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு
உரிமையுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் முதலாவது இதழில் ஆசிரியத்தலையங்கத்திற்குக் கீழ் "கவிதைகள் மிகச் சுருக்கமாக அமைவது பிரசுரத்திற்கு வசதியாகும்"எனக் கட்டமிட்டு யாரும் விடுக்காத வேண்டுகோளை விடுப்பது அந்தச்சூழ் நிலையின் பிரசுர இடர்பாட்டை விளக்கப்போது மானது. மேலும் படைப்பாளி ஒருவனின் பல படைப்புகளுக்கு ஒரு இதழில் இடம் கொடாது ஒரு படைப்பை மாத்திரமே பிரசுரிப்பதன் ஊடாக பல படைப்பாளிகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கின்ற நிலைப்பாட்டினையும் நீங்களும் எழுதலாம் கொண்டிருப்பதனைக் காணலாம்.

முதலாவது இதழின் (2007 பங்குனி - சித்திரை) ஆசிரியர் தலையங்கம் ஆசிரியரது நோக்கங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது அதன் மூலமாக அன்றைய சூழலில் வரலாற்றுப் பின்னணியை விளங்கக் கூடியதாகவும் இருக்கின்றது. அந்நோக் கங்களை இங்கே பட்டியற்படுத்துவோமாக.

1. இளைய தலைமுறைப் படைப் பாளிகளை (மாணவர் உட்பட) அறிமுகப்படுத்துவது அதற்கான பயில்களமாக நீங்களும் எழுதலாம் அமையும்.
2. புதிய தலைமுறைப் படைப் பாளிகளின் காத்திரமான பங்க ளிப்பை வேண்டியிருந்தல்.
3. கவிதை சம்பந்தமான விளக்கங் களை அளித்தல்
4. கவிதை சம்பந்தமான விமர்சனங் களுக்கு களம் அமைத்தல்
5. இளைய - புதிய தலைமுறை இடைவெளிகளை நீக்குதல், கவிதையினூடாக சமூகப் பொறுப்புணர்வை விதைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய விடயங்களை ஆசிரியர் முன்வைக்கிறார். மேலும் பயில்களம், காத்திரத்தின்களம், பரிசோதனைக்களம், விளக்கக்களம், விமர்சனக் களம், கருத்தாடற்களம் என்று நீங்களும் எழுதலாம் இதழில் அடங்க வேண்டிய அம்சங் களைப் பட்டியிலிடுகின்றன.

இவ்வாறு பல அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவரும் நீங்களும் எழுதலாம் இதழின் விடயப்பரப்புக்களை அடுத்து ஆராய்வோம்.

---

## ஆழ்ந்த அஞ்சலிகள்
## எழுத்தாளர் டாக்டர்
## இராஜ தர்மராஜா

எழுத்தாளரும், ஆயுள்வேத வைத்திய கலாநிதியுமான அமரர் இராஜதுரை தர்மராஜா 11.01.2019 இல் இயற்கை எய்தினார். 1970 களில் எழுத்துலகில் பிரவேசித்த இவர் சிறந்த சிறுகதை எழுத்தாளர். குறைந்தளவு படைத்தாலும் தரமான சிறுகதைகளைத் தந்தவர். இவரது சிறுகதைத் தொகுதியான "மனக்கோடுகள்" 2013 இல் வெளிவந்தது. மாக்சிய சிந்தனையில் நாட்டம் கொண்ட இவர் ஒரு சிறந்த இலக்கிய செயற்பாட்டாளருமாவார். திருகோணமலை முன்னோடிகள் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் நீங்களும் எழுதலாம் வாசகர் வட்ட நிகழ்வுகளின் பிரதான உரைஞராக விளங்கியவர். அன்னாரின் மறைவையிட்டு நீங்களும் எழுதலாம். ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கினுள் மூழ்கும் சமுத்திரங்கள்

திரைகடல் ஓடி திரவியம் தேடி
ஆழ்கடல் மூழ்கி வலம்புரி சங்கெடுத்து
அர்த்தமில்லா வாழ்வைத் தொலைத்து
ஆனந்த வாழ்வு தேடுகின்றோம்

நித்தம் ஒரு வேள்வி செய்து
நிர்க்கதியான மனிதம் கொன்று
பந்தம் பாசம் தொலைத்துவிட்டே
பகல் கனவு காண்கின்றோம்

கடமை மறந்து காதல் செய்து
கண்ணை மறைத்து பெண்மை தொலைத்து
காகிதப்பொட்டலமாய் சிசுவைக்கொன்று
எச்சமதாய் வீசுகின்றோம் வீதியினில்

பணம் எனும் மாயை கொண்டு
பதவி மோகம் ஆளைக் கொன்று
பலரை இழக்கச்செய்தே தாங்கள் வாழ
பாழும் அரசியல் பதவி ஏறுகிறது.

வருங்கால சிற்பிகள் வாடிப்போக
வாழ்க்கைப்பயணம் நீண்டு போக
சமுத்திரம் கூட சடுதியில் வற்ற
சங்கினுள் மூழ்கும் சமுத்திரமாகிறது
வாழ்க்கை!!

**கவிதாயினி சிவரமணி.**

| |
|---|
| தேடிச்சோறு நிதந்தின்று - பல<br>சின்னஞ் சிறு கதைகள் பேசி - பிறர்<br>வாடப் பல செயல்கள் செய்து மனம்<br>வாடித் துன்பம் மிகவுழன்று<br>நரை கூடிய கிழப்பருவமெய்தி<br>கொடுங்கூற்றுக்கு இரையாகிப் பின்<br>மாயும் வேடிக்கை மனிதர்போலே<br>வீழ்வே னென்று நினைத்தாயோ<br>- பாரதி - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ நவமாய் புலராப் பொழுது

நம்பி நம்பி
ஏமாந்து போகிறது மனம்
காலச் சுழற்சியில்
கரைந்து போகின்றன
அனைத்தும்.

நவ நவமாய்
புலரும் பொழுதுகளில்
நேற்றைய நினைவுகள்
ததும்பி மேலெழுந்து

நிகழ்ந்திருக்கக் கூடாததை
நிகழ்ந்து விட்டதால்
உழுத்துப் போன உள்ளத்தில்
ஊறும் வினாக்கள்
ஆர்ப்பரித்து அடக்கும்
அவ்வப் போது
வாழ்வின் மீதான ஆசைகளை.

களைகளுக்கு காய்களும்
காய்களுக்கு களைகளும்
இலக்காகியதில்
பசுமை வெந்த தேசத்தில்
பாலை படர்ந்து

கட்சி மாறலும்
காட்சி மாறலும்
கொள்கை மாறலுமான
குத்துக் கரணங்களும்
துரோகத்தனங்களும்
நிலைகுலையச் செய்யும்.

உச்ச சபையின்
அமளிதுமளி
அலைவரிசைகளிலும்
அச்சு ஊடகங்களிலும்
மனது நிரம்பி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளை மக்கி
மீண்டும் வேதாளம்
ஏறுவது புரியாமல்

வருடா வருடம் வருகிற
புத்தாண்டு தீபாவளி
எனப் பெருநாட்களில்
பேசு பொருளாகிய பின்
தூசாகும்
அடிப்படை விடயங்கள்!

ஆன பின்னும்
மனது நம்பும் நாளை
கூடவே
ஏமாற்றப்படுவதான உணர்வோடு!

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்



Easy Learning ..... பக்.15இன் தொடர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கப்பெற்றோம்



பூத்தது தமிழ் (கவிதைத்தொகுதி)
சேனையூர் வி. நவரெத்தினராசா
விலை : 300/= தொடர்பு 0752222960




இரத்த வரலாறு
இரா. சடகோபன்
விலை : 600/= தொடர்பு :17, ரிச்சர்ட்டி சொய்சா, ஊடகவியலாளர் வீட்டுத்திட்டம், பத்தரமுல்ல, 0777679231



ஒரு வானம் இரு நிலவு (நாவல்)
திருமலை இ. மதன்
விலை : 650/= தொடர்பு : 19, 3ம் ஒழுங்கை, மத்தியவீதி, திருமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

# Incident

## *Countee Cullen*

Once riding in old Baltimore,
Heart-filled, head-filled with glee,
I saw a Baltimorean
Keep looking straight at me.

Now I was eight and very small,And
he was no whit bigger,And so I
smiled, but he poked outHis tongue,
and called me, nigger.

I saw the whole of Baltimore
From May until December.
Of all the things that happened
thereThat's all that I remember.

(This poem written in the 1920s was triggered by a little white boy in Baltimore insultingly calling another little boy nigger, and is perhaps the most quoted of Cullen's poems.)



நூல் : "பல்கலைச்செல்வி" இராஜம் புஸ்பவனம்
படைப்புக்கள்
ஆசிரியர் : ஷெல்லி தாசன்
விலை :400/=
தொடர்பு 0767864466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வு

### கௌண்ட்டி கலென்

உள்ளமும் சிந்தனையும் களிப்பால்
நிறைய
பழைய பால்ட்டிமோரில்
சைக்கிளோடுகையில் ஒருநாள்
ஒரு பால்ட்டிமோர்க்காரன் என்னை
நேரே நோக்கியவாறிருக்கக் கண்டேன்.

அப்போது எனக்கு எட்டு வயது
மிகச் சிறுவன்
அவனும் இம்மியளவும் பெரியவனல்ல.
எனவே முறுவலித்தேன்.
ஆனால் அவன்
தனது நாக்கை வெளித்தள்ளி
என்னைக் காப்பிரி என்றான்.

மே முதல் டிசம்பர் வரை
பால்டிமோர் முழுவதையும் பார்த்தேன்.
அங்கு நடந்த அனைத்திலும்
அது மட்டுமே என் நினைவிலுள்ளது.

(பால்ட்டிமோரில் ஒரு சிறிய வெள்ளைப் பையயன் இன்னொரு பையனைக் "காப்பிரி" என இகழ்வாக விளித்தமை இக் கவிதையை 1920 களில் எழுதத் தூண்டியது. அனேகமாக இதுவே கலெனின் கவிதைகளில் மிகவும் எடுத்தாளப்படுவதாம்.)

சி.சிவசேகரம்

வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 450/= செலுத்தி, பற்றுச்சீட்டினை அனுப்பி வைக்கவும்.

R.Thanabalasingam
A/C No.106653402077
Sampath Bank
Trincomalee.

ISSN 1800-3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org